(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 2 (9)]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2009, சனவரி 23, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2009, பெப்புருவரி 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0889 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டு 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவின் விளைவாக தமது வீடுகளை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அழிவுக்குள்ளாகிய வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அரசாங்கத்தின் தலையீட்டினால் இற்றைவரை நிரந்தர வீடொன்றை பெற்றுக்கொண்டுள்ள அல்லது நிரந்தர வீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு நட்டஈடு பெற்றுக்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்ப தையும்?

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நேரடியான அரச தலையீடு இல்லாமல் பல்வேறு அமைப்புகளினதும் நபர்களினதும் முயற்சிகளினால் நிரந்தர வீடுகளை பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவ்வாறு, நிரந்தர வீடொன்றை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான பிரச்சினையை தீர்த்துக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) சுனாமி பேரழிவு காரணமாக வீடுகளை இழந்த, ஆயினும், இற்றைவரை நிரந்தர வீடுகள் கிடைக்காதுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) சுனாமியின் நிமித்தமாக வீடுகளை இழந்தநிலையில் தற்காலிக குடியிருப்புகளில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0890 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 திசெம்பர் 26 ஆம் தேதியளவில் சுனாமி அனர்த்தத்தின் போது இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளுக்கு செலுத்தவேண்டியிருந்த கடன் தொகை எவ்வளவ வென்பதையும்,

(ii) சுனாமியின் விளைவாக இலங்கை அரசுக்கு இற்றைவரை நிதி ரீதியாகக் கிடைத்த உதவித் தொகை (கடன் அல்லாத) எவ்வளவென்பதையும்,

(iii) செலுத்தப்படவேண்டியிருந்த கடன் தொகைகளில் சம்பந்தப்பட்ட நாடுகளின் இணக்கத்துடன் செலுத்தாமல் பதிவழிக்கப்பட்ட வெளிநாட்டு கடன் தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இதற்கேற்ப, 2004 திசெம்பர் 26 ஆம் திததி நிகழ்ந்த சுனாமி பேரழிவையடுத்து ஏற்கனவே செலுத்தவேண்டியிருந்த கடன் தொகையிலிருந்து விலக்களிக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவென் பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுனாமி பேரழிவு ஏற்பட்டதன் விளைவாக இலங்கை அரசுக்கு நிதி ரீதியிலான உதவிகளை (கடன் அல்லாத) வழங்கிய வெளிநாட்டு அமைப்புகள் மற்றும் நாடுகள் யாவையென்பதையும்,

(ii) வழங்கிய பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) சுனாமி நிமித்தமாக அரசு செலுத்தவேண்டியிருந்த கடன் தொகையை பதிவழித்த அமைப்புகள் அல்லது நாடுகள் யாவையென்பதையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0891 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 சார்க் மாநாட்டிற்கு அண்மித்த காலப்பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்ததன் காரணமாக அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காக கொழும்பு மாவட்டத்தில் தகர்த்து அகற்றப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதெயும்,

(ii) அவை எவ்விடங்களிலிருந்து அகற்றப்பட்டன என்பதையும்,

(iii) இதனால் குடியிருப்புகளை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தகர்த்து அகற்றப்பட்டதன் விளைவாக வீடுகளை இழந்த எத்தனை குடும்பங்களுக்கு அரச தலையீட்டுடன் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டதென்பதையும்,

(ii) எத்தனை குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1007 / ' 08

கௌரவ ஜோன்ஸ்டன் பெர்னாந்து,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை வங்கியின் போக்குவரத்து முகாமையாளராக குலசேகர என்பவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார் என்பதையும்,

(ii) இலங்கை வங்கிக்குச் சொந்தமான 03 வாகனங்களை அவர் தனது தனிப்பட்ட உபயோகத்திற்கு ஈடுபடுத்திக்கொண்டுள்ளார் என்பதையும்,

(iii) இலங்கை வங்கிக்குச் சொந்தமான ப்ராடோ வகையைச் சேர்ந்த சில ஜீப் வண்டிகள் தற்போது காணாமல் போயுள்ளன என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) வங்கிக்குச் சொந்தமான சொத்துக்களை தவறான முறையில் நாசமாக்கும் போக்குவரத்து முகாமையாளருக்கு பின் திகதியிட்டு வாகனங்களை பயன்படுத்து வதற்காக அனுமதியளிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படடுள்ள போக்குவரத்து முகாமையாளரான குலசேகர என்பவர் இலங்கை வங்கிக்குச் சொந்தமான வாகனங்களை தவறாக கையாளுவது மற்றும் வாகனங்களை காணமல் போகச்செய்வது ஆகியன தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை அவர் எடுப்பாரா?

(ஈ) இன்றேல் , ஏன்?

0769 / ' 08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, நியாகம சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவு கள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) நியாகம சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0779 / '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பத்தேகம, கினிமெல்லகஹவில் அமைந்துள்ள "சான்ட்லங்கா கன்பெக்ஷ னரிஸ்" உள்ளூர் தொழிற்சாலை என்ற வகையில் பெருந்தொகையானவர் களுக்கு தொழில் வழங்கி நடத்தப்படுகிறது என்பதையும் ,

(ii) முக்கலை மின்சாரம் இன்மையால் அத்தொழிற்சாலையின் கொள்ளளவை அதிகரிக்கமுடியாதுள்ளதென்பதையும்,

(iii) முக்கலை மின்சாரம் பெற்றுத் தரும்படி இலங்கை மின்சார சபையிடம் கோரியிருந்தாலும் சில மீற்றர் தூர வித்தியாசம் காரணமாக இற்றைவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இதனால் புதிய மின்மாற்றி ஒன்றைப் பொருத்தி மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்பது சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தற்பொழுது உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக அத்தகைய பெருந்தொகையான பணத்தை ஒரே நேரத்தில் முதலீடு செய்ய முடியாதென்பதையும்,

(ii) உள்ளூர் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் இத்தொழிற்சாலைக்கு மின்சார உப நிலையம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தால் இன்னும் பெருந்தொகையானவர்களுக்குத் தொழில் பெற்றுக் கொடுக்கமுடியும் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஈ) இந்த நிலைமையைக் கவனத்திற் கொண்டு உள்ளூர் கைத்தொழிலைப் பாதுகாக்கும், மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் புதிய மின்சார உப நிலையம் ஒன்றை அமைப்பதற்குச் செலவாகும் பணத்தில் ஒரு பகுதியையாவது வழங்குவதற்குச் சாத்தியமுண்டா என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0527 / ’08

கௌரவ அனுர திஸாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) “மிஹின் ஏயார்” விமானக் கம்பனிக்குச் சொந்தமான விமானங்கள், கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களா அல்லது குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட வையா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவை கொள்வனவு செய்யப்பட்டவை என்றால் பின்பற்றப்பட்ட கொள்வனவு நடைமுறை யாதென்பதையும்

(ii) கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட விமானங்கள் இருப்பின் எப்போது பெறப்பட்டதென்பதையும்,

(ii) அதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டிருப்பின் அது எப்போதென்பதையும்,

(iii) அவ்வாறு பெறப்பட்ட விமானங்களுக்கான பணம் செலுத்தப்பட்ட அடிப்படை, செலுத்தப்பட்ட தொகை மற்றும் அதற்கான நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட விமானங்களுக்காக இற்றைவரை செலுத்தப்பட்ட தொகை மாதரீதியாக தனித்தனியாக எவ்வளவென் பதையும்,

(ii) நிலுவைத் தொகை இருப்பின், அது எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2009.1.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2008 திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1579/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

*

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 06 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 06

2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டகசாலை முற்பணக்கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களங்கள் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ருபா 1,100,000,000 இலிருந்து ரூபா 1,500,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2008.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2009.01.12

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,—இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2006 மே மாதம் 31 ஆந் திகதிய 1447/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.1.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2006 நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய 1469/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.1.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2007 செப்தெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 1513/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.1.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

மக்கள் தொடர்பாடல்,ஹ தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008 மே மாதம் 05 ஆந் திகதிய 1548/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.1.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2009, பெப்புருவரி 17, செவ்வாய்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0894 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2008 ஆம் ஆண்டில் வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளுக்காக நடைபெற்ற தேர்தல்களுக்கு அரசினால் செலவிடப்பட்ட மொத்த தொகை எவ்வளவு என்பதையும்,

(ஆ) பல்வேறு விடயங்களின் கீழ் உள்ள அந்தப் பணம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் அவர் இந்த சபையில் குறிப்பிடுவாரா,

(இ) இன்றேல் ஏன்

0750 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுனஆரச்சி,— பிரதம அமைச்சரும், உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பாதுக்கை, மீப்பே, ஹேவாகம்வத்தை கிராமக் கருத்திட்டத்திற்காக காணி வழங்கும் பொருட்டு 90 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்,

(ii) பாதுக்கை பிரதேச செயலாளரால் 2003.08.22 ஆம் திகதி காணி பெறுனர்களது கூட்டமொன்று கூட்டப்பட்டது என்பதையும்,

(iii) மீண்டும் 2005.06.18 ஆம் திகதி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளது தலைமையில் பாதுக்கை பிரதேச செயலகத்தில் காணி பெறுனர்களின் கூட்டமொன்று கூட்டப்பட்டது என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீடமைப்பு நோக்கத்திற்காக காணித் துண்டொன்றை ஒப்படைத்தல் எனக் குறிப்பிட்டு, காணித் துண்டின் இலக்கம் அல்லது காணியின் பரப்பளவைக் குறிப்பிடாது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அளிப்புப் பத்திரம் என்றவகையில், அரச இலச்சினையுடன் உரிமைப் பத்திரமொன்று காணி பெறுனர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) 2005.10.20 ஆம் திகதி பாதுக்கை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற தியவரக் கிராமத்தின் அங்குரார்ப்பண விழாவின் போது வீடொன்றை அமைத்துக்கொள்ளும் பொருட்டு குறித்த அமைச்சினால் ரூபா 50,000/- வழங்கப்படுவதாக காணி பெறுனர்களுக்கு கடிதமொன்று வழங்கப்பட்டது என்பதையும்,

(iii) காணி பெறுனர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 2000 ஆம் ஆண்டிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, 2001.08.09 ஆம் திகதி காணிக் கச்சேரி பாதுக்கை சனசமூக நிலையத்தில் நடைபெற்றதென்பதையும்,

(iv) தெரிவு செய்யப்பட்ட காணி பெறுனர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் நில அளவைக் கட்டணமாக ரூபா 1500/- உம், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் விண்ணப்பப் படிவக் கட்டணமாக ரூபா 100/- உம், காணியைத் துப்புறவு செய்வதற்காக ரூபா 10,000/- உம் இடைக்கிடை அறவிடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்குறிப்பிட்டவர்களுக்கு இதுவரை காணித்துண்டுகள் கிடைக்காமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0604 / ’08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தயட்ட கிருல 2008 கண்காட்சியில் மாகாண சபைக்குரிய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் கலந்து கொண்டனவா என்பதை யும்,

(ii) மாகாண சபைகள் கலந்து கொண்டால் ஒவ்வொரு மாகாண சபையும் வெவ்வேறாக எத்தகைய கடமைகளில் ஈடுபட்டன என்பதையும்,

(iii) அந்தந்த மாகாண சபைகளினால் கண்காட்சி கூடங்கள் அல்லது கண்காட்சி உபகரணங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், ஒவ்வொரு மாகாண சபையும் வெவ்வேறாக எவ்வாறான கண்காட்சிகளை ஏற்பாடு செய்திருந்தன என்பதையும்,

(v) ஒவ்வொரு மாகாண சபையின் அமைச்சுக்களினால் அல்லது நிறுவனங்க ளினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த காட்சிக்கூடங்கள் மற்றும் செலவு செய்யப் பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(vi) அத்தொகை செலவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் செலவுத் தலைப்பு க்கள் யாவை என்பதையும்,

(vii) அனைத்து மாகாண சபைகளினாலும் அந்த கண்காட்சிக்காக செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல்,ஏன்?

0989 / ’08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வெளிநாட்டு மீன்பிடிக் கலங்கள் மூலமாக இந்நாட்டுக்கு மீன் இறக்கப்படுகின்ற தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2008 சனவரியில் இருந்து ஒக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு மீன்பிடிக் கலங்களினால் முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்திலும் காலி வணிகத் துறைமுகத்திலும் இறக்கப்பட்ட மீனின் அளவு தனித்தனியாக எவ்வளவு,

(ii) உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் இவ்வாறு இறக்கப்பட்ட மீன்களின் தொகையிலிருந்து இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கவேண்டிய அளவு யாது,

(iii) 2008 சனவரி மாதத்தில் இருந்து இற்றைவரை காலி வணிகத் துறைமுகத்திலும் முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்திலும் இறக்கப்பட்ட மீன்களுள் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட மீனின் அளவு யாது,

(iv) மேற்படி காலப்பகுதியில் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் அடைந்த நிதி ரீதியான இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1008 / ’ 0 8

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்களது சம்பளத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பணம் அறவிடப்படுகின்ற தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2007 இரண்டாம் அரையாண்டின் பொருட்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கணக்குக் கூற்றுக்கமைய 2007 யூலை மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரை பணம் வரவு வைக்கப்படவில்லை என்பதையும்,

(ii) 2008 மார்ச் மாதத்திலிருந்து ஓகத்து மாதம் வரையிலான 06 மாதங்களுக்குரிய பணம் வரவு வைக்கப்படவில்லையென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) தமது சம்பளத்தில் 10% மும் சில நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான பங்களிப்புத் தொகை மற்றும் கூட்டுத்தாபனத்திற்கான பங்களிப்புத் தொகையில் 28% மும் அறவிடப்பட்டு நிதிப் பிரிவுக்கு அனுப்பப்படடிருந்தாலும் உரிய கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படாதது தொடர்பாகவும் உரிய வட்டி கிடைக்காமை தொடர்பாகவும் ஊழியர்கள் நிருவாக மற்றும் நிதி பிரிவு தொடர்பாக அதிருப்த்தி கொண்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இதுவரை ஊழியர் சேமலாப நிதியத்தில் வரவு வைக்கப்படாதுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) இப் பணத்தொகையை துரிதமாக வரவு வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எப்போதிருந்தென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

1002 / ' 08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள் விமானசேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) துறைமுக அதிகாரச் சபையில் தொழல் வழங்கும் போது இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது தற்போதும் நடைமுறையில் இருக்கின்றதா என்பதையும்,

(ii) அது நடைமுறையில் இல்லாவிடில் அதற்கான காரணங்களையும்,

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இலங்கை துறைமுக அதிகாரசபையில் எழுதுனராக பணியாற்றி 2004 இல் இளைப்பாறிய கடவத்த, இஹல பியன்வில, 370/2-1 ஆம் இலக்க முகவரியில் வதியும் திரு. விஜேசிங்கவின் பிள்ளைகளுக்கு அவர்களின் தகைமைகளுக்கு ஏற்ப தொழில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(இ) இன்றேல், ஏன்?

1010 / ' 08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தொழிற்பாட்டு உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்ளாததன் காரணமாக கடற்றொழிலாளர்களுக்கெதிராக கடற்றொழில் திணைக்களம் நீதிமன்ற நடவடிக்கை எடுத்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதுவரை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மீனவர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் தனித் தனியாக எத்தனை என்பதையும்,

(ii) தொழிற்பாட்டு உத்தரவுப்பத்திரங்கள் எத்தகைய படகுகளுக்காகப் பெறப்பட வேண்டும் என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தொழிற்பாட்டு உத்தரவுப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு காப்புறுதிச் சான்றிதழ் பெறப்பட வேண்டியது கட்டாயமான நிபந்தனையா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0888 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆராச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மீகொட, கொடகம, பெல்பொலவத்த, சமாதி மாவத்தை மற்றும் கிரிமெட்ட பாதை என்ற இரு இடங்களில் நிகழ்ந்துள்ள விபத்துகளின் காரணமாக புகையிரத பாதுகாப்புக் கடவை அல்லது மின்சார சமிக்ஞை விளக்கு ஒன்று தேவை என்பதை ஹோமாகம பிரதேச சபையும் பிரதேசவாசிகளும் எழுத்து மூலம் அறிவித்துள்ளனரென்பதையும்,

(ii) அதற்குப் பதிலளிக்குமுகமாக 2008.04.30ஆம் திகதியிட்ட கடிதமொன்று அவருக்கு ஒரு பிரதியுடன் புகையிரத பொதுமுகாமையாளரால் ஹோமாகம பிரதேச சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கடிதத்தின் 2வது பந்தியில், புகையிரத பாதைக்குக் குறுக்காக உள்ள பாதையில் பயணம் செய்கின்ற பயணிகளுக்குப் பாதுகாப்பு வழங்க புகையிரத திணைக்களத்திற்கு எவ்வித தேவையும் இல்லை எனவும்,

(ii) 3வது பந்தியில், புகையிரத பாதைக்குக் குறுக்காக உள்ள பாதையில் பயணம் செய்கின்ற வாகன ஓட்டுனர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான பொறுப்பு புகையிரத திணைக்களத்திற்கு இல்லை எனவும்,

(iii) 4வது பந்தியில், புகையிரத திணைக்களம் அதற்காகக் கொள்கைத் தீர்மானமொன்றை எடுத்துள்ளதெனவும்

குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) புகையிரத பொதுமுகாமையாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்காக உள்ள பாதையில் பயணம் செய்கின்ற பயணிகளினதும் வாகனங்களினதும் பாதுகாப்பை அலட்சியப்படுத்துவதற்குக் கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டது எப்பொழுது,

(ii) தீர்மானம் எடுப்பதில் கலந்து கொண்டவர்கள் யார்,

(iii) அத்தீர்மானத்தைப் பொதுமக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, பெப்புருவரி 17, செவ்வாய்க்கிழமை)**

1000 / ' 08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 செப்தெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் இத்தாலியில் தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்கூறிய ஒவ்வொரு ஆண்டிலும் தொழில் வாய்ப்புக்கள் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை பிரதேச செயலாளர்கள் பிரிவு அடிப்படையில் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறியவர்களை சேர்த்துக் கொள்வதற்கு பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டனவா என்பதையும்,

(ii) அவ்வாறெனின் குறிப்பிட்ட திகதி மற்றும் பத்திரிகைகள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1001 / ' 0 8

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 செப்தெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் கொரியாவில் தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்கூறிய ஒவ்வொரு ஆண்டிலும் தொழில் வாய்ப்புக்கள் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை பிரதேச செயலாளர்கள் பிரிவு அடிப்படையில் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறியவர்களை சேர்த்துக் கொள்வதற்கு பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டனவா என்பதையும்,

((ii) அவ்வாறெனின் குறிப்பிட்ட திகதி மற்றும் பத்திரிகைகள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2009, பெப்புருவரி 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1003 / '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் வலவ விசேட அதிகாரப் பிரதேசத்திற்குரிய கிரிஇப்பன்வெவ பிரிவின் ஹபருகல 700 ஆம் பகுதியில் சுமார் 1½ ஏக்கர் காணியை 20 வருடங்களுக்கும் அதிகமான காலம் திரு. எஸ். ஏ. சமரவீர எனும் கமக்காரர் அனுபவித்து வருகிறார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எக்காரணத்தின் அடிப்படையில் இக் காணியின் உரிமை இவருக்கு இல்லாதொழிக்கப்பட்டது என்பதையும்,

(ii) இவர் அனுபவித்து வருகின்ற காணியை நிருணயித்துக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

0494 / '08

கௌரவ விஜித ஹேரத்,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான எத்தனை வாகனங்கள் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டுள்ளன,

(ii) இவ்வாகனங்களின் ரகம், இலக்கம் மற்றும் விடுவிக்கப்பட்ட திகதி ஆகியவை யாவை,

(iii) எந்தெந்த நிறுவனங்களுக்கு அல்லது நபர்களுக்கு எவ்வடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளது,

(iv) இணைக்கப்பட்டிருப்பின் அவர்களின் பெயர் மற்றும் பதவி ஆகியவை யாவை,

(V) இவ்வாகனங்களை விடுவிப்பதற்கு உரிய அனுமதி பெறப்பட்டிருந்ததா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப் பட்டுள்ளதா,

(ii) இக்கட்டிடங்களின் முகவரி மற்றும் அதற்கான வாடகை அல்லது குத்தகை அடிப்படை யாது,

(iii) வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அல்லது நபர்களின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0605 / '08

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தெயட்ட கிருல – 2008 கண்காட்சி மூலம் எவ்வளவு வருமாணம் மதிப்பிடப்பட்டது என்பதையும்,

(ii) இக் கண்காட்சி எந்த நிறுவனத்தில் எவ்வளவு நிலப்பரப்பில் நடத்தப்பட்டது என்பதையும்,

(iii) கண்காட்சியின் பொருட்டு அரச அல்லது தனியார் துறைக்கு வர்த்தகக் கூடங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்,

(iv) அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் இந்த வர்த்தகக் கூடங்களுக்கான வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் விற்பனையின் மூலம் எவ்வளவு பணம் பெறப்பட்டு ள்ளது என்பதையும்,

(v) இக் கண்காட்சியை பார்வையிடுவதற்காக எத்தனை டிக்கெட்டுக்கள் அச்சிடப்பட்டன என்பதையும்,

(vi) அவற்றுள் எத்தனை விற்பனை செய்யப்பட்டன என்பதையும்,

(vii) டிக்கெட் விற்பனையின் மூலம் பெறப்பட்ட தொகை எந்த நடவடிக்கைக்காகப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது என்பதையூம்;

(viii) ஈட்டிக்கொள்ளப்பட்ட தொகையில் எவ்வளவு பணம் இதற்காகப் பயன் படுத்தப்பட்டது என்தையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

0798 / ' 08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, நாகொட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்களினதும் உபதபால் அலுவலகங்களினதும் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவ்வொவ்வொரு அலுவலகத்திலும் சேவையாற்றுகின்ற அமைய அல்லது நிரந்தர உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) இவ்வலுவலகங்கள் ஆரம்பத்திலிருந்த தபால் விநியோகிக்கும் எல்லைகளை விரிவாக்கியுள்ளனவா,

(iv) அவைகள் எந்தக் காலப்பகுதியில் எந்த அலுவலகங்களுக்குரிய எல்லைகள்

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இப்பொழுது புதிதாக கிராமங்கள் உருவாக்கப்பட்டு கிராமங்கள் விரிவடைந்ததன் காரணமாக தற்போதைய கடிதங்கள் விநியோகிக்கும் எல்லைகள் திருத்தப்பட்டுள்ளனவா,

(ii) அதன்பிரகாரம் ஒவ்வொரு தபால் அலுவலகத்தில் ஒவ்வொரு தபால் விநியோகிப்பவருக்கு உரிய வீடுகளின் எண்ணிக்கையும் சம்பந்தப்பட்ட தூர எல்லையும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2008 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட தபால் அலுவலகங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இப்பிரிவில் புதிதாக உபதபால் நிலையங்களை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா,

(iii) ஆமெனில், எந்தக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0521 / '08

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மொரகஹகந்த நீர்த் தேக்கத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் பொருட்டு மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு,

(ii) 2007 ஆம் ஆண்டுக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது,

(iii) மேற்படி கருத்திட்டத்தின் பொருட்டு வெளிநாட்டுக் கடன்கள் அல்லது மானியங்கள் வழங்கப்படுகின்றதா,

(iv) மேற்படி கருத்திட்டம் எத்தனை ஆண்டுகளில் பூர்த்திசெய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது,

(v) ஒவ்வொரு ஆண்டுக்காகவும் ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி, கருத்திட்டத்தின் காரணமாக இடம்பெயர நேரிடுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை மற்றும் ஒரு குடும்பத்துக்கு வழங்கப்படும் காணியின் அளவு எவ்வளவு,

(iii) காணிகளுக்கு மேலதிகமாக இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி, கருத்திட்டத்தின் பொருட்டு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அது எப்போது,

(iii) அதன் பிரகாரம் விதப்புரைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி, கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான விழாவுக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு,

(ii) இதில் விளம்பரப் பணிகளின் பொருட்டு பொறுப்பாயிருந்த கம்பனி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) தொலைக்காட்சி அறிவித்தல்கள், சுவரொட்டிகள் , பத்திரிகை அறிவித்தல்கள், விளம்பரப் பலகைகள் மற்றும் ஏனைய விளம்பரப் பணிகளின் பொருட்டு குறித்த கம்பனிக்குச் செலுத்தப்பட்ட தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0347 / '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பிரதி அமைச்சர் இற்றைவரை விஜயம் செய்த வெளிநாடுகள் யாவையென்பதையும்,

(ii) பிரதி அமைச்சர் மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி விஜயங்களின் போது அவருடன் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் பெயர் மற்றும் பதவி ஆகிய விபரங்களையும்,

(ii) பிரதி அமைச்சரின் தனிப்பட்ட பணியாட்டொகுதி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்களாயின் அவர்களின் பெயர் மற்றும் பதவி ஆகிய விபரங்களையும்,

(iii) அவர் உள்ளிட்ட ஏனைய உத்தியோகத்தர்கள் பயணம் செய்த விமானக் கம்பனி மற்றும் வகுப்பு யாதென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி விஜயங்களினால் இந்நாட்டிற்கு கிடைத்த வெளிநாட்டு உதவி, வெளிநாட்டுக் கடன், கருத்திட்டம் அல்லது வேறு அனுகூலங்கள் யாவையென்பதை ஒவ்வொரு விஜயத்திற்கும் உரியவாறு வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0697 / '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) எல்லைக்கோட்டு முறையின் கீழ் அரச காணிகள் 30 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாது,

(iii) அவ்வாறான காணிகள் சுதந்திரக் கொடுப்பனவுப் பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்டிருப்பின் அது அனைத்து எல்லைக்கோட்டுக் காணிகளுக்கும் செல்லுபடியாகுமா,

(iv) தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாத்திரம் சுதந்திரக் கொடுப்பனவுப் பத்திரம் வழங்க முடியுமா,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவில் எல்லைக்கோட்டு முறையின் கீழ் காணிகள் வழங்கப்பட்டுள்ள அல்லது அதற்காகப் பிரேரிக்கப் பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி, காணியின் அளவு மற்றும் அவற்றின் மூலம் கடந்த 5 வருடங்களில் கிடைத்த குத்தகை வருமானம் தனித்தனியாக யாது,

(ii) மேற்படி காணிகளின் அபிவிருத்தி செய்யப்பட்ட /அபிவிருத்தி செய்யப்படாத மற்றும் பராமரிப்பு நிலைமைகள் யாவை,

(iii) எல்லைக்கோட்டுக் குத்தகைக் காணிகளிலிருந்து பெறப்படும் வருடாந்த வருமானம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) களுகல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் எம்.எல். 81 மற்றும் 88 உத்தரவுப் பத்திரங்களின் மூலம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு எவ்வளவு,

(ii) அவை தொடர்ந்தும் செல்லுபடியாகுமா,

(iii) வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படாது பிரத்தியேக வேண்டுகோளின் அடிப்படையில் மேற்படி காணிகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதா,

(iv) மேற்படி காணிகளை சுதந்திரக் கொடுப்பனவுப் பத்திரத்தின் மூலம் எஸ். கே. டபிள்யூ. கருணாரத்ன மற்றும் எஸ். ஏ. யூ. ராஜபக்ஷ ஆகியோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

(v) மேற்படி பிரிவில் ஏனைய காணிகளின் பொருட்டும் சுதந்திரக் கொடுப்பனவுப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்க முடியமா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, பெப்புருவரி 18, புதன்கிழமை)**

0780 / ' 08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, வெலிவிட்டிய— திவிதுர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்களினதும் உபதபால் அலுவலகங்களினதும் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவ்வொவ்வொரு அலுவலகத்திலும் சேவையாற்றுகின்ற அமைய அல்லது நிரந்தர உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) இவ்வலுவலகங்கள் ஆரம்பத்திலிருந்த தபால் விநியோகிக்கும் எல்லைகளை விரிவாக்கியுள்ளனவா,

(iv) அவைகள் எந்தக் காலப்பகுதியில் எந்த அலுவலகங்களுக்குரிய எல்லைகள்

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இப்பொழுது புதிதாக கிராமங்கள் உருவாக்கப்பட்டு கிராமங்கள் விரிவடைந்ததன் காரணமாக தற்போதைய கடிதங்கள் விநியோகிக்கும் எல்லைகள் திருத்தப்பட்டுள்ளனவா,

(ii) அதன்பிரகாரம் ஒவ்வொரு தபால் அலுவலகத்தில் ஒவ்வொரு தபால் விநியோகிப்பவருக்கு உரிய வீடுகளின் எண்ணிக்கையும் சம்பந்தப்பட்ட தூர எல்லையும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2008 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட தபால் அலுவலகங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இப்பிரிவில் புதிதாக உபதபால் நிலையங்களை ஆரம்பிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளதா,

(iii) ஆமெனில், எந்தக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0781 / ' 08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, கரன்தெனிய பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்களினதும் உபதபால் அலுவலகங்களினதும் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவ்வொவ்வொரு அலுவலகத்திலும் சேவையாற்றுகின்ற அமைய அல்லது நிரந்தர உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) இவ்வலுவலகங்கள் ஆரம்பத்திலிருந்த தபால் விநியோகிக்கும் எல்லைகளை விரிவாக்கியுள்ளனவா,

(iv) அவைகள் எந்தக் காலப்பகுதியில் எந்த அலுவலகங்களுக்குரிய எல்லைகள்

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இப்பொழுது புதிதாக கிராமங்கள் உருவாக்கப்பட்டு கிராமங்கள் விரிவடைந்ததன் காரணமாக தற்போதைய கடிதங்கள் விநியோகிக்கும் எல்லைகள் திருத்தப்பட்டுள்ளனவா,

(ii) அதன்பிரகாரம் ஒவ்வொரு தபால் அலுவலகத்தில் ஒவ்வொரு தபால் விநியோகிப்பவருக்கு உரிய வீடுகளின் எண்ணிக்கையும் சம்பந்தப்பட்ட தூர எல்லையும் எவ்வளவு

